www.tamilarangam.net


மது மயக்கத்தில் தனது மனைவியை 'சோமதேவா' என்று அழைக்கிறான் சத்திய சோமன். 'சோமதேவா' என்ற பெயரில் தனது கணவனுக்கு வேறு பெண் தொடர்பு இருக்குமோ?" என்ற ஐயம் தேவசோமாவைப் பற்றிக்கொள்கிறது.

அதனால் ஏற்பட்ட பொறாமையால் கணவனுடன் சண்டை இடுகிறாள்.

அந்த வீரசைவனோ "மதுபோதையால் நாதவறிவிட்டது அத்தகைய மதுவை இனிமேல் அருந்துவதில்லை" என்று மனைவிக்கு சத்தியம் செய்கிறான்.

"எனக்காக சத்தியம்செய்து தெய்வத்திற்காக கொடுத்த சத்தியத்தில் இருந்து தவறி சாபத்திற்கு உள்ளாக வேண்டாம்" என்று தேவசோமா தடுக்கிறாள்.

பின்னர் இருவரும் வேறு மதுக்கடைக்குப் போகின்றனர்.

அப்போதுதான் தனது கபால ஓடு (பிச்சைப்பாத்திரம்)காணாமல் போனதை உணர்கிறான் அந்த வீரசைவன்.

அந்த மதுக்கடையில் வைத்திருந்த மாட்டுக் கொம்பில் மதுவைத் தானமாக பெற்று தனது கணவனுக்குக் கொடுக்கிறாள் தேவசோமா.

அப்போது அந்தத் தெருவால் புத்ததுறவி ஒருவர் வருகிறார்.

அந்தத் துறவிதான் தனது கபால ஓட்டை திருடி இருப்பார் என்ற சந்தேகம் அந்த வீரசைவனுக்கு ஏற்படுகிறது........

இப்படியாக தொடரும் பல்லவ அரசனின் அங்கத நாடகம், சமணர் காலத்தில் சைவர்களின் நிலைப்பாட்டை படம் பிடித்துக் காண்பிக்கிறது.

தமிழர்கள் தம்மிடை இயல்பாக இருந்த ஆடல், பாடல் கேளிக்கைகளாம், இல்லறவியல் இன்பங்கள் ஊடாக இந்து மதத்தை சீர்திருத்த ஆரியம் வழிவகுத்திருக்கிறது. பின்னர் துறவறக் கட்டுப்பாடுகள் நிறைந்த சமண புத்த தமிழர்களை கொலை மரத்தில் ஏற்றி கொல்லவும் வழி சமைக்கப்பட்டிருக்கிறது.

தமது பண்பாட்டின் வழி இந்து மதத்தை தேர்வு செய்து தம் போக போக்கியங்கள் ஊடாக வழிபாடியற்ற எழுந்த தமிழர்களால் மீண்டும் ஆரியக் கொடி ஏற்றி வைக்கப்படுகிறது.

கட்டு மீறிய இன்பங்களைத் துய்த்தலும், பின்னர் கட்டுப்பாட்டிற்காக ஏங்கித் தவித்தலும் தமிழர்தம் குணவியல்பு.

'சங்ககால வாழ்க்கை முறையில் காணப்பட்ட குறைபாடுகளால் மனம் நொந்த மக்களுக்கு வேறு வாழ்க்கை முறை தேவைப்பட்டது. பொறியாலும் புலனாலும் கவர்ச்சியுற்றுக் காதல் வாழ்க்கை, வீரவாழ்க்கைகளில் ஊக்கம் கண்ட தமிழ் மக்கள் கட்டுப்பாடுகள்நிறைந்த வாழ்க்கையையும் அவாவினர். சமண, பௌத்த கொள்கைகள் செல்வாக்குப் பெற்ற நிலை இவ்வாறுதான் ஏற்பட்டிருத்தல் வேண்டும்'. என தமிழறிஞர் ஆ. வேலுப்பிள்ளை அவர்கள் 'தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்' எனும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

எமது அன்றைய தமிழர்கள் நெறிபிறழ்ந்து வாழ்ந்து, பின்னர் தமக்கோர் கட்டுப்பாடு அவசியம் என்பதை உணர்ந்த போது பௌத்தராக, சமணராக, இந்துவாக மட்டும் மாறவில்லை. அவர்கள் இன்று வரை இசுலாமிய மார்க்கத்தின் கட்டுப்பாடுகளை பின்பற்றிவரும் கதையும் இதுவே.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தமிழர் என்பது 'ஸ்திரமிலர்' (நிலையான கொள்கை அற்றவர்கள்) என்பதன் திரிபு என்றும் கூறப்படுகின்றது.

அவர்களின் இன்றைய நிலைப்பாடுகள் அதனைத் தெளிவுபடுத்தும்.

போட்டி பொறாமை; ஒற்றுமை இன்மை; தலைமைக்கு விசுவாசம் இன்மை; குறுகிய வட்டம்; கற்பனை வாழ்க்கை; சுயநலம்; போலிப்புகழ்; உள்ளொன்று வைத்து புறம் ஒன்று பேசல்; சூதாட்டமான பரிமாற்றம் என தமிழர்கள் தமக்குள்ளே விரிசல் கண்டு, இன்று உலக அரங்கிலே பின் தங்கி நிற்கின்றனர்.

**பொது நலத்துடனான தமது பிற்கால நிலை பற்றிய தெளிவை ஏற்படுத்தாமல், தம்மைச் சூழ சிக்கலை ஏற்படுத்தித் தத்தளிப்பது** உலக அரங்கிலே தமிழருக்கு இருக்கும் பலவீனத்தைத்தான் காண்பிக்கிறது.

இன்றைய தமிழகத்தின் அரசியல், சினிமா அரசியலாகி அங்குள்ள தமிழர் பந்தாடப்படும் நிலையே இதற்கு சிறந்த உதாரணம். பண்டைய கேளிக்கை மயக்குகளில் இருந்து மீண்டு கொள்ள முடியாத சோகத்தில் சிக்கிப் போய் கிடக்கும் தமிழருக்கு சினிமா நடிகர்களே உயிர்ப்பிச்சை வழங்கி வருகின்றனர். தாம்பற்றி நிற்கும் வழிபாட்டில் வரும் புராண, இதிகாச தெய்வீக லீலைகளுக்கு தேவகுமாரர்களாக, குமாரத்திகளாக சினிமாவில் இருந்து தேர்வு செய்து மயங்கிக் கிடக்கும் தமிழர்கள், நாயக பாவத்தில் முன்னேற சினிமா மாயையை நோக்கித் தவம் கிடக்கின்றனர்.

இந்த அப்பாவித் தமிழர்களின் பலவீனத்தைத் தனக்கு சாதகமாக்கும் சகோதரத் தமிழனோ அரசியல், பொருளாதார இலாபத்திற்காக அவர்களை தவறான வழியில் இட்டுச் செல்கிறான்.

தமிழரின் தவறான போக்குகளால் மனம் நொந்து சீர்திருத்தம் பேச முற்படுவோர் மதத்துரோகி என்றும், சமூகத்துரோகி என்றும் சுயநலமிகளால் முத்திரை குத்தப்பெற்று விரோதிக் கண்கொண்டு பார்க்கப்படுகின்றனர்.

அப்பர் சுவாமிகள் கட்டுப்பாடுகள் நிறைந்த சமணத்திற்குள் நுழைந்து பல்கலையும் பயின்று துறவியாகி வயோதிப காலம்வரை இருந்துவிட்டு, மீண்டும் சீர்திருத்தம் பெற்ற சைவத்திற்குள் இணைந்து கொண்டதும், பல்லவ அரசன் கூட அப்பரைப் பின்பற்றியதும் தமிழர்தம் இத்தகைய நிலைப்பாட்டின் வழியேதான் என்று கூற இடமுண்டாகிறது.

(தொடரும்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மாந்தர் வாழ்வு துயரம்

*—பரம்—*

நெஞ்சில் துன்ப முள்ளு
நீண்டே குத்தி நிற்கும்
பிஞ்சு மடியில் குந்தி
பொய்யா பால்முலை நோக்கும்
கஞ்சி காச்சக் கையில்
காசுதானும் இல்லை
பஞ்சம் பட்டினி வாழ்வில்
பரந்து விரிந்து செல்லும்

தட்டிப் படலை மறைப்பு
தரையில் பாய்தான் விரிப்பு
மட்டும் சேலை இரண்டு
காட்டும் பொட்டு நூறு
பட்டுப் புடவைக் கடையை
பார்வை மேய்ந்து அணியும்
முட்டுப் பட்டார் வாழ்வு
முற்றும் துயரம் ஆகும்.

அடுப்பில் சட்டி வைக்க
அந்தக் கணமே அங்கு
அடுக்காய் நான்கு பிள்ளைகள்
அமர்ந்து வட்டில் தூக்கும்
கொடுத்து மீதி இருந்தால்
கொதிக்கும் வயிற்றி லூற்றி
படுத்தால் தூக்கம் வருமோ
பாவியார் வாழ்க்கை சோகம்

ஓலைக் குடிசைத் திண்ணை
உற்று நோக்கும் விண்ணை
காலை கிழக்கில் உதயம்
காணும் முன்னே எழுந்து
வேலை தேடி யோடி
மேனி சோர்ந்து வந்து
மாலை மட்டும் உண்ணும்
மாந்தர் வாழ்வு துயரம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூச்சம் சிறுகதை விமர்சனம்

(தமிழன்)

இன்று நம்மில் நிறையப்பேர் தகுந்த வழிநடத்தல், கட்டுப்பாடு என்பன இல்லாமல் எதுசரி, எதுபிழை, எது நல்லது எது கெட்டது என்று புரியாமல் அளவுக்கு மீறிய சுதந்திரத்தை எடுத்து மனம் போனபடி வாழ்ந்து எதிலும் மனநிறைவு நிம்மதி சந்தோஷம் இல்லாமல் ஏனோ தானோ என்று வாழ்கின்ற இக்காலகட்டத்தில் எழுத்தாளர்களின் கட்டாய கடமை நல்வழிகளையும், தமிழ் பண்பாட்டினையும், அதன் நன்மைகளையும் விளக்கிநிற்கும் படைப்புக்களை உருவாக்குவதுதான். மாறாக சமுதாயத்தை மேலும் சீரழிவுக்கு இட்டுச்செல்வதாக அமையக்கூடாது. கூச்சம் என்ற இச்சிறுகதையில் மிகமிக மனவருத்தத்தைத் தரும் விஷயங்கள் என்னவென்றால் அன்பு என்ற அந்தப் புனிதமான உணர்வை சராசரி தேவைகளில் ஒன்றான உடலுடன் சம்பந்தப்படுத்துவது 5 நிமிடங்களுக்குத் திருப்தியை 5 நிமிட அறிமுகத்தில் கொடுப்பதை அன்பைப் பகிர்தல் என்றால் இச் சிறுகதையை எழுதியவர்க்கு அன்பு என்ற சொல்லின் அர்த்தம் புரியாமல் இருக்கலாம்.

அடுத்ததாக ஒரு பெண், ஒரு ஆண் இணைந்த, ஒருத்தனுக்கு ஒருத்தி என்ற எமது திருமணவாழ்வில் உண்மையான அன்பும் நேயமும் இருக்குமானால் எதையும் வாழ்வில் இருவரும் வெளிப்படையாக வெளிப்படுத்தி வாழவேண்டிய தேவையில்லை கணவன் – மனைவி புரிந்துணர்வு மூலம் ஒருவரை ஒருவர் சந்தோஷப்படுத்தி அதனால் சந்தோஷப்பட்டு வாழ்வதுதான் எமது வாழ்க்கை. அப்படிக்கிடைக்கும் சந்தோஷத்திற்காக காத்திருப்பதோ சுகமென கருதுபவர்கள்தாம் எமது தமிழ்ப் பெண்கள். இலைமறை காய்மறையாக இருப்பதில் இருக்கும் சிறப்பு வெட்டவெளிச்சத்தில் இல்லை.

எங்கள் தமிழ்ப்பண்பாட்டின் புனிதத்தையும் அது வரையறுக்கும் வாழ்வில் கிடைக்கும் மனநிறைவு, மகிழ்ச்சி, ஆத்ம திருப்தி என்பனவற்றை விளக்கும் வகையிலான படைப்புக்களை பிரசுரித்தல் கட்டாய கடமை இந்தமாதிரியான தவறான கருத்தைச் சொல்லும் படைப்புக்களை பிரசுரித்தலில் இருந்து தவிர்க்கப்படவேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும். ஏனெனில் இங்கு உள்ள பொதுசனத்தொடர்பு சாதனங்கள் இதைவிட மோசமான விஷயங்களையும் வெளியிடுகின்ற இக்காலகட்டத்தில் ஐரோப்பா வாழ் ஐரோப்பியர்களே தங்கள் பண்பாட்டினை வெறுத்து எங்கள் பண்பாட்டினை மதித்து அதன்படி வாழ விரும்புகிறார்கள். அனேகமானோர் வாழத்தொடங்கியிருக்கும் இக்காலகட்டத்தில் நாங்கள் பன்னாடைகள் ஆகக் கூடாது என்பதும் எனது தாழ்மையான கருத்தாகும்.

எதிலும் ஒரு வரையறை இருப்பது இயற்கை. அது எழுத்துச் சுதந்திரத்திற்கும் பொருந்தும் இச்சிறுகதை பிரசுரமானதையிட்டு மனவருத்தமடைந்த எனக்கு திரு. முல்லையூரான் அவர்களின் கோபமான சாடல் மனநிறைவைக் கொடுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# சுதந்திரம்!!

குளத்து மீனுக் கொக்கு.......
கொடுக்கலாம் சுதந்திரம்.
கூரைவாழ் எலிக்கு பூனை........
கொடுக்கலாம் சுதந்திரம்.
வண்ண (ப்) புள்ளி மானுக்கு........
வனவேடன் வழங்கலாம் சுதந்திரம் – ஆனல்
குருதிசிந்திடும் தமிழர் எமக்கு – – ஆழ்வோர்
கொடுப்பாரோ...? சுதந்திரம்

பட்டமரம் துளிர்த்திடலாம்..........
சுட்டமீன் துடித்திடலாம்.
வட்டநிலாகூட நம்முடலை (க்) .........
சுட்டெரிக்க செய்திடலாம்...
செத்தபிணம் நடைபயின்று.........
சிதைக்குமது சென்றிடலாம்..:
சத்தியமாய் (த்) தமிழர் சுதந்திரத்தை........
எடுத்திடுதல் நிச்சயமே! கிடைத்திடுதல் பூச்சியமே..!!

சிங்கத்தமிழர் எம்மை....
சித்தெறும்பு என்றெண்ணி....
தங்கத்தமிழர் எம்மை.......
தானழிக்கத் தானெண்ணி......பேரை
ஆற்றிலே தூக்கி எறிந்தவர்கள்......
பாராளுமன்றில் பாதக சட்டங்கள் போட்டவர்கள்.
தலைநிமிர்ந்து தமிழர்வாழ! தருவாரா? சுதந்திரத்தை.
தலைநிமிர்ந்து தமிழர்வாழ! தருவாரா? சுதந்திரத்தை..

கழுதையின் குரலில் கேட்குமா? சங்கராபரணம்..
நரியின் சிந்தனையில் நம் நலம் இருக்குமா ?
காக்கைசிறுத்தாலும் குயிலாகி பாடுமா?
நாயின் வாலைத்தான் நிமிர்த்திட முடியுமா ?....அதனால்
கிடைப்பது சுதந்திரம் பூச்சியமே! எடுபது சுதந்திர நிச்சயமே....!இதனால்
நம்பியது ! போதும்! போதும்! தமிழா..........!
நாம் கொண்ட வேற்றுமையும்! காணும்!! காணும்!! தமிழா........
பச்சைமர (ப்) பட்டைபோல தமிழா......!
பற்றிவிடு ஒற்றுமையை....!! பற்றிவிடு ஒற்றுமையை....!!!

– – – – – –

வேலணையூர் பொன்னண்ணா

www.tamilarangam.net


# அருவுருவம்

.........................................................நெடுங்கதைத்தொடர்.................முல்லையூரான்...............

5

நிர்மலனின் அக்கா கலாவை ராம் திருமணம் செய்வதற்கான ஒழுங்குகள் எல்லாம் நடந்து முடிந்துவிட்டது. இந்தியாவில்தான் முதன்முதலில் கண்டு சினேகிதர்களாகிய நிர்மலனும், ராமும் தொடர்ந்து டென்மார்க்கில் ஒரே இடத்தில் வசித்துவருபவர்கள்.

டென்மார்க்கில் ராமினுடைய வாழ்க்கை மிகுந்த வேறுபாடுடையதாக இருந்தாலும் வறுமைப்பட்ட குடும்பத்திலிருந்து அதுவும் பல பெண் சகோதரிகளை கரைசேர்க்கும் பொறுப்பில் நிர்மலன் வாழ்ந்து வருபவன். அதற்காக கடினமான வேலையெனினும் இரவுபகல் பாராது உழைத்தும் வருபவன்.

ஈழப்போராட்டசூழலில் இயக்க ஈடுபாட்டினுள் தன்னை இணைத்துக்கொண்டிருந்த நிர்மலன் சீதனம் தொடர்பான தமிழ்ச்சமூகத்திடையே கிடக்கும் குப்பைகளால் மிகவும் சமூக கோபமுள்ளவனாக மாறியிருந்தான்.
இது ஒருபுறமிருக்க ராமின் குடும்ப நிலையும் தரமுள்ள கல்வி,பொருளாதார சூழ்நிலைகள் உள்ளவனே ராம் என்பதினாலும் அதன்பால் தனது சகோதரியின் திருமணத்தின்பால் ராமுடன் விருப்பமுள்ளவனாக இருந்தான் நிர்மலன்.

தமிழர் சமூதாயத்தில் இளைஞர்களை திருமணத்திற்காக தேர்ந்தெடுக்கும்போது பிரதானமாக பார்க்கப்படும் சில விதிமுறைகளை புலம்பெயர் நாடுகளில் கடைப்பிடிப்பதில்லை என்பதை நிர்மலனும் அறிவான்.
அத்தகைய நடைமுறைகளை முற்றாக கடைப்பிடிப்பதாயின் மேற்குலக நாடுகளில் வாழும் இளைஞர்கள் ஏதோ ஒரு நடைமுறைக்குள் ஒத்துவராது போவதற்கு நிறையவே நிகழ்தகவிருந்தது.
ஆதலால் இத்தகைய திருமண நிச்சயங்களின்போது அவற்றை தவிர்த்துக்கொண்டு திருமண ஒழுங்குகளை நிர்மலன் செய்துமுடித்திருந்தான்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தனது சகோதரியின் திருமணமொன்றே அவனுக்கு பெரிதாக இன்று இருந்தது. சகோதரியின் வயது ஏறிக்கொண்டே போவதும், அவளின் திருமணத்திற்காக காத்திருக்கும் மற்றைய சகோதரிகளின் நிலையும்தான் நிர்மலனை இத்திருமண விவகாரத்தில் அவனுடைய விருப்பங்களையும் பொருட்படுத்தாது ஒத்துக்கொள் ளவைத்தது.

ராம் நன்றாக மதுஅருந்துபவன்.

"இதுஒரு பெரிய விசயமே"மற்றவர்கள் சொன்னது அவனுக்கு சமாததானமாயிற்று.

ராம் இதற்கு முன்னர் பல டனிஸ் கன்னிப் பெண்களுடன் சேர்ந்து வாழ்ந்தவன்.

"இதையும் பாத்தியேண்டால் அப்ப நல்ல பொடியன எங்க தேடப்போறாய்"

இப்படி ஊர்சொன்னதால் அதையும் மறந்தான்.

கள்ளமாய் நாட்டு எல்லைகளை தாண்டி தமிழ் அகதிகளை நாட்டுக்கு நாடு கடத்துபவனும் ராம்தான்.

அத்துடன் இன்னுமொரு கடுமையான விடையமும் இதற்குள் இருந்து ராமைப்பற்றி எச்சரிக்கை கொள்ளவைத்தது நிர்மலனை.

அதாவது முன்பொரு தடவை கடத்திக்கொண்டுபோய் இன்னொருநாட்டில் விடவேண்டிய ஒரு கன்னிப்பெண்ணை நித்திரைக்குளிசைகொடுத்து மயக்கிவிட்டு கெடுத்துவிட்டதாக பரவிய செய்திதான் அது.

"பார்! போடர் கடத்துறது உழைப்பு.அதோட ஒரு சேவை என்றும் சொல்லலாம். ராம் என்ன செய்யாததையே செய்துபோட்டான்."

"சும்மாய் விட்டிட்டு அலுவலைப்பார். சீதனம் இல்லாமல் வந்து வாய்கிறான். அதையும் இதையும் பார்த்துக்கொண்டு விசர்வேலை பாக்காத"

இது திருவண்ணர் சொன்ன புத்திமதி.

சரி என்னவோ இருக்கட்டும் ராமினுடைய பெற்றாரின் சம்மதத்தையாவது பெற்றுவிட்டால் மனதுக்கு நின்மதி என்று நினைத்து இதுபற்றி ராமுடன் நிர்மலன் ஒருநாள் கதைத்தான்.

"மச்சான் அப்பா அம்மாவோடை கதைக்கவே தேவையில்லை. நான் சொன்னால் சரிதான். மறுப்பேதும் வராது.கலியாணத்திற்குப்பிறகு சொல்லிவிட்டால் சரி. அதுவும் இப்ப இந்தப்பிரச்சனைக்குள்ள கடிதங்களும் போகாது. திரும்பிவாறதுக்குள்ள எனக்கு வயதுபோகிடும்."

இது ராமின் காரணங்கள்.

"குறிப்பையாவது பார்" என்றான் அவனது இன்னொரு நண்பன்.

"அதில எனக்கு நம்பிக்கை இல்லை" என்று விட்டதோடு நிர்மலன் ஜேர்மனிலுள்ள தனது சகோதரியுடன் தொடர்புகொண்டு திருமணத்திற்கு சம்மதம் வாங்கிவிட்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அப்போதும் அவனது சகோதரி கலா " என்ன எனக்கு வருகிறவர் இரண்டாம் தாரமாகவோ இருக்கிறார்?
என்று அவள் கேட்டதற்கு பதில்சொல்லாமலே மனதிற்குள் புழுங்கியபடியே சமாளித்துக் கொண்டுவிட்டான் நிர்மல்.

திட்டமிட்டபடியே திருமணமும் ஜேர்மனில் நடந்தேறிமுடிந்தது.
கூடவேயிருந்து திருமணத்தை நடத்திமுடித்த திருப்தியோடுதான் நிர்மலனும் டென்மார்க் திரும்பினான்.

இனி வெளிநாட்டு அமைச்சுக்கு விண்ணப்பித்து காத்திருப்பதைவிட மனைவி கலாவை களவாகவே டென்மார்க்கிற்குள் கொண்டுவந்துவிடுவது என்று ராம் சொன்னபோது உண்மையிலேயே நிர்மலன் சந்தோசப்பட்டுப்போனான்.

திசைதெரியாது வாழும் மற்றைய சகோதரிகளுக்கும் இவ்வாறே கல்யாணத்தை செய்துவைத்துவிட்டால் தனதுபொறுப்பிலிருந்து நீங்கி தனது எதிர்காலத்தைப் பற்றியும் நினைக்கலாம் என்ற சுகமான கற்பனையில் நிர்மலன் இருந்த காலத்தில் ஒருநாள் அவனைத்திடுக்கிடும்படியாக ராமின் செய்தி தூக்கிவாரிப்போட்டது.

கலாவை டென்மார்க்கிற்கு தான் கூப்பிடப்போவதில்லை என்ற அவனின் செய்தியே அது.
நிர்மலன் கலங்கிப்போனான்.அயலில் வாழ்ந்த பெரியவர்களை அழைத்துச் சென்று தகுந்தமாதிரி கதைத்துமாயிற்று.
ராம் முற்றாக மறுத்துவிட்டான். காரணத்தையும் சொல்ல மறுத்தான்.
ஒருநாள் கோபம் தாங்காது உரத்துக்கேட்கப்போக "உன்ர அக்காவை கேள் சொல்லுவாள்" என்ற குண்டோடு ராம் வெளியேறிப்போய்விட்டான்.
என்னவாக இருக்கும். எப்படி சகோதரியிடம் இதுபற்றிக்கேட்பது?
என்றவினாக்களுக்குள் நிர்மலன் தவித்துப்போயிருந்தபோது......

ஒருநாள் கலாவே தொலைபேசியில் கதைத்தாள்.

கதைத்தாள் எனபதைவிட.....அழுதுகொட்டினாள்.

...............................அடுத்த இதழில் முடியும்.......................................................................



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சிறுவர் பகுதி

**அன்பான ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மாணவ மாணவிகளுக்கும் மாமா எழுதிக் கொள்வது!, கடந்தபுரட்டாதி மாதம் 23ம் திகதி (23.09. 95) டென்மார்க் புூீளராவும் நடைபெற்ற எழுத்துப் பரீட்சைப் போட்டிக்கு பெரிதும் ஒத்துழைப்புத் தந்து சிறப்பித்தமைக்கு எமது சங்கத்தின் சார்பிலும், சிறுவர் பகுதி மாமா சார்பிலும் நன்றியைக் கூறிக் கொள்கின்றேன்.**

அத்துடன் எத்தனையோ சிரமத்தின் மத்தியிலும் தமது பிள்ளைகளை முன்னின்று ஊக்குவித்து வழிநடத்திச் சென்ற பெற்றோர்களுக்கும், அதற்கு குருவாக இருந்து கற்பித்த ஆசிரியர்களுக்கும், தபால் மூலம் Children Chanal என்ற விலாசத்திற்கு தனிப்பட்ட முறையில் எழுத்து மூலம் தொடர்பு கொண்டு பரீட்சைக்கு தயாராகிய மாணவ மாணவிகளுக்கும் எமது நன்றிகளும் வணக்கமும் கூறிக் கொள்கின்றேன்.

எல்லாவற்றிற்கும் மேலாக மத்தியஸ்தம் புரிந்த ஆசிரியர்களுக்கும் மற்றும் தமிழ் டெனிஸ் தோழமை ஒன்றிய அங்கத்தவர்களுக்கும் எமது நன்றியைக் கூறிக் கொள்கின்றேன். ஏதாவது சந்தேகங்கள் ஏற்படின் எழுத்து மூலம் Children Chanal என்ற பகுதிக்கு தொடர்பு கொண்டு விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

***அன்பான சகோதர சகோதரிகளே,***

இந்த மாதிரி வினாத்தாள் மூலம் உங்களை சிறுவர் பகுதி அங்கத்திற்கு அழைக்கின்றேன். இவ் வகையான மாதிரி வினாத்தாள் உங்களை பரீட்சைக்கு தயாராக்கவும், தெரியாத விடயங்களை உட்கிரகிக்கும் நுழை வாயிலாகவும் உள்ளது. 1996ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் நடைபெற விருக்கும் போட்டிப் பரீட்சைக்கு இவ்விதமான கேள்வி முறைகளையே நாம் பெரிதும் பயன்படுத்துவோம் என்பதை மாமா தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

சகோதர சகோதரிகளே, உங்களுக்கு ஏதாவது சந்தேகங்கள் ஏற்படின், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் தொடர்பு கொண்டால் விடையை மிக விரைவில் மாமா எழுதி அனுப்புவார்.

ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள எழுத்துப் பரீட்சைப் போட்டியில் மேற்பிரிவில் மிகவும் சிறப்பாக எழுதிய இரு கட்டுரைகள் சிறுவர் பகுதியில் இணைத்துள்ளோம், நீங்களும் இது போன்ற சிறந்த கட்டுரையை எழுதி அனுப்பினால் நாம் பரிசீலனை செய்து பிரசுரிப்போம்

அத்துடன் உங்களது விடைகளை, மிகவும் தெளிவாக எழுதி கீழேயுள்ள முகவரிக்கு அனுப்பினால், Children Chanal மாமா திருத்தி அனுப்பி வைப்பார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அனுப்ப வேண்டிய முகவரி:-

**Children Chanal**
**Svendsgade 58**
**7100 Vejle.**

## மாதிரி போட்டிப் பரீட்சை 1 – 1995

### இப் பந்தியைப் படித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

நாய் நன்றியுள்ள மிருகம். அது வீட்டைக் காவல் காக்கும். நாயில் பல இனங்கள் உண்டு. ஆனால் மேலைத்தேய நாட்டவர், நாயை, தமது பிள்ளைகள் போல வளர்க்கின்றார்கள். நாய் நன்கு பழகியவர்களைக் கண்டால் வாலை ஆட்டி தனது நன்றியைக் காட்டும். சில நாய்கள் வேட்டை ஆடுவதற்கும் உதவுகின்றன. வீட்டிலே வளர்க்கப்படும் மிருகங்களில் நாயும் ஒன்று. நாய் பல குட்டிகளை ஈனும். அது மாமிசங்களை விரும்பி உண்ணும்.

1. நாய் எப்படிப்பட்ட மிருகம் ?
2. பழகியவர்களைக் கண்டால் நாய் என்ன செய்யும் ?
3. நாய் எதனை விரும்பி உண்ணும் ?

புள்ள 3.5 = 15

### சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் எழுதுக.

1. நாய் தாவர உணவுகளை விரும்பி உண்ணும் -------------
2. பழகியவர்களைக் கண்டால் நாய் குரைக்கும் -------------
3. நாயை வீட்டிலே வளர்ப்பார்கள் -------------
4. நாயில் பல இனங்கள் உண்டு -------------
5. நாய் வேட்டையாடுவதில் மிக வல்லது -------------

புள்ளி 5.3 = 15

**3) பன்மைச் சொற்களை ஒருமைச் சொற்களாக எழுதுக.**

1. பெண்கள் ----------
2. சிறுவர்கள் ----------
3. ஆண்கள் ----------
4. மேசைகள் ----------
5. கோப்பைகள் ----------

புள்ளிகள் 5 .3 = 15

**4) ஒத்தகருத்துச் சொல் தருக.**

1. தகப்பன் ----------
2. அறம் ----------
3. பாடசாலை ----------
4. வீதி ----------
5. பயணம் ----------

புள்ளிகள் 5 .3 = 15

**5) எதிர்ச்சொல் எழுதுக.**

1. பகல் ----------
2. வந்தேன் ----------
3. காய் ----------
4. சிரித்தேன் ----------
5. இருந்தேன் ----------

புள்ளிகள் 5 .3 = 15

**6) பின்வரும் சொற்களின் எழுவாய்ச் சொல்லைத் தெரிவு செய்க.**

1. நான் பாடம் படித்தேன். ----------
2. கமலா விளையாடினாள். ----------
3. அப்பா சுவாமி கும்பிட்டார். ----------
4. குழந்தை விளையாடியது. ----------
5. அம்மா தோசை சுட்டாள். ----------

புள்ளிகள் 5 .3 = 15

**7) பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஐந்து வசனங்கள் எழுதுக.**

1. பசு
2. எனது டென்மார்க் வாழ்க்கை.
3. விரும்பிய ஒரு பெரியார்.

புள்ளிகள் 10

www.tamilarangam.net


# தாய் மொழிக் கல்வியின் அவசியம்

கல் தோண்றி மண் தோண்றாக் காலத்து முன் தோன்றிய மூர்த்த மொழி தமிழ். தமிழ் மொழி எமது தாய் மொழி.

அது இன்று காலத்திற்குக் காலம் கயவர்களின் வஞ்சனையால் இன்று சீர் குலைந்து நிலையிழந்துள்ளது.

தமிழ் மொழியின் அவசியம் தான் என்ன, அது எந்த வகையில் எம் வாழ்க்கைக்கு உறுதுணையாகின்றது என்பதை நாம் அயல்நாட்டில் இருக்கும் போது தான் முழுமையாக அறிந்து கொள்கிறோம். தாய் மொழியைப் பயன்படுத்தவும் படிக்கவும் தெரியாத எவரும் பிற மொழியைப் படிக்கவோ பயன் படுத்தவோ கடினம் என அறிஞர்கள் சிலர் கூறியுள்ளார்கள்.

" தாய் மொழி அவசியமா ? " , என்று சிலர் கேட்கிறார்கள்.

இது என்ன கேள்வியிது, இது ஒரு குழந்தைக்கு தாய் அவசியமா என்று கேட்டது போல் இருக்கின்றது. ஏனென்றால் ஒரு குழந்தைக்கும் தாய்க்கும் உள்ள இணைப்பு, பந்தம், தொடர்பு எத்தகையதோ, அத்தகையது தான் ஒரு மனிதனுக்கும் அவனின் தாய்மொழிக்கும் உள்ள தொடர்பு ஆகும். குழந்தையின் வளர்ச்சிக்கு தாய்ப்பால் எவ்வளவு இன்றியமையாததோ அதே போன்றது தான் ஒரு மனிதனின் மன வளர்ச்சிக்கு அவனின் தாய் மொழி இன்றியமையாததாக விளங்குகின்றது, என அண்ணல் காந்தியடிகள் அழுத்தமாகக் கூறியிருந்தார்.

எவ்வளவு அருமையான சிந்தனைகள். மனிதனின் உயிர் மூச்சில் தாய் மொழி ஒன்றியிருக்கின்றது. அவன் வேறு மொழியைப் பயில்வதற்கும், அதிலே அவன் பேரறிவுடன் விளங்குவதற்கு தாய் மொழி தான் காரணம். ஒரு மனிதன் எப்பொழுதும் தாய் மொழி ஊடாகவே வேற்றுமொழியைக் கற்கிறான். வேற்று மொழியைப் பயிலும் பொழுது அவன் உதிரத்துடனே பதிந்துள்ள தாய்மொழி மூலம் தான் அவன் யோசிக்கின்றான். அத் தாய்மொழி எம் தமிழன்னை ஊட்டிய மொழியினால் வந்த அறிவு, அதனால் எமக்கு எப்போதும் தாய் மொழி கடினம் அல்ல. அவ்வறிவை இழக்கவைத்து வேற்று மொழியைத் திணித்துக் கற்பது தான் கடினம். அதை நாம் உணர வேண்டும். தாய் மொழி எமக்கு எங்கள் தமிழன்னை தந்த சொத்து. தாய் மொழியை வெறுப்பது எமது ஈன்ற தாயை வெறுப்பது போல் ஆகும். தாய் மொழி ஒருவனுக்கு தாயைப் போல் ஆகும். தாய் மொழியை வெறுத்து வேற்று மொழியை நாடுதல், பெற்ற அன்னையை வெறுத்து வேற்றுத் தாயுடன் வாழ்வது போல் ஆகும். அப்பொழுது அக் குழந்தையின் மன வளர்ச்சியும், உள வளர்ச்சியும் வேறாகிவிடும். அதனால் அறிவு வளர்ச்சியும் கெட்டுப் போய்விடும்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மொழி ஒரு கருத்துவாகனம் மட்டுமின்றி இன நாகரீகத்தினதும் பண்பாட்டினதும் கொள்ளலாகும். தாய் மொழி தெரியாதவனுக்கு, தன் இன நாகரீகம் தெரியாமல் போகின்றது, பண்பாடு புதைந்து போகின்றது.

இப்படியான நாகரீகம், பண்பாடு இல்லாத மனிதரை நாம் முழு மனிதா் என அழைக்கலாமா? வேற்று மொழியை நாடியது போல் அந்நிய பண்பாட்டையும், நாகரீகத்தையும் பயில்வோமா?.

எமது நாட்டை இழந்து!
எமது மொழியை இழந்து!
எமது இனத்தை இழந்து!
நாம் வாழ்வதின் அர்த்தம் தான் என்ன?
இது சிந்திக்க வேண்டிய விடயம் அல்லவா?

அயல் நாட்டில் வாழும் தமிழர், அயல் மொழிக் கல்வியை பாடசாலையில் கற்று வருவதனால், எனது தாய் மொழி அவசியமா என்று நினைப்பதுண்டு. அப்படி நினைத்தல் கூடாது. எமது எதிர் காலத்தையும் நாம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும்.

அன்னிய நாட்டிற்கு குடிபுகுந்தன்றோ - எம்
ஆழ்ந்த எதிர்காலத்தை நினைத்திருந்தால்
அன்னைக்கு நிகரான எம் தாய் மொழியை
அவசியமா என்று தான் கேட்போமா?

அயல் மொழியைப் பயிலும் சிறார்கள் தாய்மொழி அவசியமா என்பதையும், தமிழை போதிக்க விரும்பாத பெற்றோர்களையும் நினைத்தால் வேதனையாக இருக்கின்றது. சில பெற்றோர்கள் வீட்டிலே தமிழ் கதைப்பதில்லை, பிள்ளைகள் தமிழைக் கற்றுவிடுவார்கள் என்ற பயம். சிலர் வைபவங்களிலும் விழாக்களிலும் தமது பிள்ளைகளுக்கு தமிழ் தெரியாது என்று சொல்வதைப் பெருமையாகக் கருதுகிறார்கள். அவர்கள் தாய் மொழியின் அவசியத்தைப் புரிந்து கொள்ளும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை.

எமது பெரியோர்கள் பல கஸ்டங்களை முறியடித்து, தமிழை வளர்த்தனர்.
தமிழை வளர்ப்பதற்காக உயிரையும் கொடுத்தனர்.
நாம் தமிழை வளர்க்கவில்லையென்றாலும், தமிழ் படிக்காமல் இருப்பது நியாயமா?
நாம் தமிழைக் கற்று, அதிலேபொதிந்துள்ள அறிவைப் பெற்று பேரறிவுள்ள பெரியோர்களாக வாழ்வோமாக.

வாழ்க தாய்மொழி!
வளர்க தமிழ்மொழி!!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# எனது வெளிநாட்டு வாழ்க்கையும் எதிர்காலமும்

நான் என் தாய் நாட்டை விட்டு இங்கே வந்து 7 ஆண்டுகள் ஆகிவிட்டது. இங்கே நான் டெனிஸ் மொழியைப் பயின்று வருகிறேன். எனக்கு முதலில் டெனிஸ் கற்பதற்கு கடினமாகத் தான் இருந்தது. ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல அம் மொழி எனது கையிலும் வாயிலும் புகுந்து புகுந்து விளையாடத் தொடங்கியது. பாடசாலையிலே ஒவ்வொரு பாடங்களிலே தேர்ச்சியான புள்ளிகள் கிடைத்தது. அப்போது எனக்கு கல்வி கற்பதற்கு மனதிலே ஆசை வந்தது. நான் படித்து வைத்தியராக வருவது தான் எனது எதிர்காலக் கனவு. கனவு நனவாகுவதில்லை என்று சிலர் கூறுவார்கள். ஆனால் என் கனவு நனவாகும் என்ற நம்பிக்கை எனக்கிருக்கின்றது.

நான் இப்பொழுது 9ம் வகுப்பு படிக்கிறேன். இவ் வருடமே இறுதிச் சோதனையை எடுத்துக் கொண்டு கும்னாஸியம் (Gymnasium) என்ற நடு உயர்தரப் பள்ளியில் சேரவுள்ளேன். அம் மூன்று ஆண்டுப் படிப்பை முடித்த பின்னர் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து 6 வருட வைத்தியப் பட்டப் படிப்பைத் தொடரவுள்ளேன்.

வைத்தியரான பின்னர், எனது தாய் நாடான, இலங்கைக்குத் திரும்பி, அங்கே சேவை செய்ய விரும்புகிறேன். எனது வெளிநாட்டு வாழ்க்கை, எனது வாழ்விலே ஒரு பெரிய திரும்பம். நான் ஒரு கிரகத்தில் வாழ்வதைப் போலத் தான் என் வெளிநாட்டு வாழ்க்கையைக் கருதுகிறேன். மனிதர்கள், அதாவது இந் நாட்டில் வாழும் மக்கள், அவர்கள் எனக்குப் புதிது, அவர்களின் மொழி புதிது, அவர்களின் நாகரீகம், பண்பாடு, வாழ்க்கை முறை அனைத்தும் புதிது. நான் இலங்கையில் வசித்த போது மனிதர்கள் அனைவரும் எம்மைப் போன்றோர், என்னைப் போன்றோர் என்று தான் கருதினேன். ஆனால், இங்கே வேறு இன மனிதரையும், அவர்கள் நாகரீகத்தையும் அறிந்த பின்னரும், இவ்விரு இன மனிதர்களும் வெகு தூரத்தில் இருக்கும் மனிதர்கள், அதாவது கிரகங்களுக்கும் உலகத்திற்கும் உள்ள தூரம் போன்றதாக நான் கருதுகிறேன்.

நான் இந்நாட்டிலே தமிழியாகத் தான் இருக்க விரும்புகிறேன். ஆனால் வருடங்கள் செல்லச் செல்ல என் மனதிலே புதிய யோசனைகளும் எதிர்காலக் கனவுகளும் தோன்றின.

"இது என் நாடல்ல, இங்கு நான் கல்வி கற்றாலும் வைத்தியரானாலும் இது எனக்கு அந்நிய நாடாகத் தான் இருக்கும். நான் தமிழியாக அந்நிய நாட்டிலே வாழ்வதும் வாழப் போவதும் கடினமாகத் தான் இருக்கும். அதனால் தான் எனது நாட்டை விரும்புகிறேன். சொந்த மண்ணில் வாழ்வது, சொர்க்கத்தில் வாழ்வதைப் போலக் கருதுகிறேன். எனது எதிர்கால வாழ்க்கையை, எந்தன் சொந்த மண்ணில் வாழ்வதற்கு ஆவலுடன் காத்திருக்கின்றேன்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மார்கழி மாதம் தொடக்கம் பங்குனி மாதம் வரையில் வரும் இந்து மத விஷேட தினங்கள்

| December | மார்கழி | கிழமை | |
|---|---|---|---|
| 21.12.95 | 6 | வியாழன் | அமாவாசை விரதம் |
| 25.12.95 | 10 | திங்கள் | சதுர்த்தி விரதம் |
| 27.12.95 | 12 | புதன் | விநாயக ஷஷ்டிவிரதம். உதயத்தின் முன் திருவெம்பாவை பூஜாரம்பம். |
| January | | | |
| 01.10.96 | 17 | திங்கள் | சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம் கார்த்திகை விரதம் |
| 03.01.96 | 19 | புதன் | பிரதோஷ விரதம் |
| 04.01.96 | 20 | வியாழன் | இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம் |
| 05.01.96 | 21 | வெள்ளி | பூரணை விரதம், உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் |
| | தை | | |
| 15.01.96 | 1 | திங்கள் | தைப்பொங்கல் |
| 16.01.96 | 2 | செவ்வாய் | ஏகாதசி விரதம் |
| 18.01.96 | 4 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| 20.01.96 | 6 | சனி | அமாவாசை விரதம் |
| 23.01.96 | 9 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 29.01.96 | 15 | திங்கள் | காரத்திகை விரதம் |
| 31.01.96 | 17 | புதன் | ஏகாதசி விரதம் |
| February | | | |
| 02.02.96 | 19 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 04.02.96 | 21 | ஞாயிறு | பூரணை விரதம், தைப்பூசம் |
| | மாசி | | |
| 15.02.96 | 3 | வியாழன் | ஏகாதசி விரதம் |
| 16.02.96 | 4 | வெள்ளி | பிரதோஷ விரதம் |
| 17.02.96 | 5 | சனி | மஹாசிவராத்திரி விரதம் |



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | | |
|---|---|---|---|
| 18.02.96 | 6 | ஞாயிறு | அமாவாசை விரதம் |
| 22.02.96 | 10 | வியாழன் | சதுர்த்தி விரதம் |
| 25.02.96 | 13 | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| March | | | |
| 01.03.96 | 18 | வெள்ளி | ஏகாதசி விரதம் |
| 02.03.96 | 19 | சனி | சனிப்பிரதோஷவிரதம் |
| 04.03.96 | 21 | திங்கள் | மாசி மகம் |
| 05.03.96 | 22 | செவ்வாய் | பூரணை விரதம் |
| | பங்குனி | | |
| 15.03.96 | 2 | வெள்ளி | ஏகாதசி விரதம் |
| 17.03.98 | 4 | ஞாயிறு | பிரதோஷவிரதம் |
| 19.03.96 | 6 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| 22.03.96 | 9 | வெள்ளி | சௌபாக்கிய கௌரிவிரதம் |
| 23.03.96 | 10 | சன | சக்திக்கணபதிசதுர்த்திவிரதம் கார்த்திகை விரதம் |
| 28.03.96 | 15 | வியாழன் | ஸ்ரீராம நவமி |
| 30.03.96 | 17 | சனி | ஏகாதசி விரதம் |
| April | | | |
| 01.04.96 | 19 | திங்கள் | பிரதோஷவிரதம் |
| 02.04.96 | 20 | செவ்வாய் | பங்குனி உத்தரம் |
| 03.04.96 | 21 | புதன் | பூரணை விரதம் |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

டென்மார்க் தமிழர் கத்தோலிக்க கலாச்சார ஒன்றியம் வழங்கும்

## மாபெரும் 5 வது ஆண்டு நத்தார் புதுவருட ஒளிவிழா

காலம் :- 16.12.95 சனிக்கிழமை மாலை 16.00

இடம்:- சுளயா பாடசாலை, கேர்ணிங்

நிகழ்சிகள்:

சமூகநாடகம், நடனம், நாட்டிய நாடகம், இசை நிகழ்ச்சி, போட்டி நிகழ்ச்சி "பொருளும் புதிரும்" மற்றும் பல .....

**Peter Schalk** கினால் இலங்கைத் தமிழர் தொடர்பாக எழுதப்பட்ட புத்தகம்.

# Hoping against Hope

Appeals for help to the President of Sri Lanka, and other dignitaries by the Citizens Committee, Yālppāṇam(Jaffna), Sri Lanka, 1990-1992

With a preface, an introduction, and an index by Peter Schalk

Edited and published by Peter Schalk

All volumes of *Lanka* can be ordered by e-mail through secretary@relhist.uu.se, by fax to 46 18 128471 or by mail to P. Schalk, Box 1604, 751 46 Uppsala, Sweden. Each volume inclusive of mailing, costs 250 Skr, £ 25 or $ US 36. Kindly send a check to »Uppsala University, Lanka«.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிறந்தநாள்

**06. 12. 1993**
ஜெனதீகன் சிவராஜன்
**JENATHIKAN Sivarajan**



# Fødselsdagshilsener



வாழ்த்துக்கள்

**04. 09. 1990**
அனர்ஸ் அந்தோணிப்பிள்ளை
**ANDERS Anthonipillai**

பிறந்த தினத்தைக் கொண்டாடும்
இச் சிறார்களை
நீடூழி வாழ்கவென கற்பகம்
வாழ்த்துகின்றது

www.tamilarangam.net

Post besørget blad
7401 HRC 50147

அங்கத்தவர்கள் - நண்பர்கள் - வாசகர்கள்
அனைவருக்கும் எமது

# நத்தார் - புதுவருட
# தைப்பொங்கல்

நல் வாழ்த்துக்கள்

# God Jul og Godt Nytår



# 1996



**Tamilsk - Dansk Venskabsforening**
**தமிழ் - டெனிஸ் தோழமை ஒன்றியம்**
**Tamil Danish Friendship Association**
**Postboks 103, DK-7400 Herning, Denmark**
**Tlf & Fax +45 97 12 55 93, Giro 695- 0892**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்